Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வரு ஆனிமீ ௧௦ உ (1943 ஜூன்மீ 24 வியாழக்கிழமை) [இல. உஉ

## நிலாவரையிற் பிரேதம்

சென்ற திங்கட்கிழமை யன்று ஓர் ஆடவனின் பிரேதம் உருக்குலைந்த நிலையிற் புத்தூர் நிலாவரையிற் கிடக்கக் காணப்பட்டது. அது யாருடைய பிரேதம என்பது கண்டு பிடிக்கப்படவில்லை. இறந்தவருக்கு 40 அல்லது 45 வயதுவரையி லிருக்கலாம். அவர் புதிய வேட்டியொன்று உடுத்திருந்தார். கொடுக்குக் கட்டி, புதிய சால்வையொன்றை அதன்மேற் கட்டியிருந்தார்.

மரண விசாரணையில், மரணம் நீரில் மூழ்கியமையால் நேர்ந்ததென்று தீர்ப்புக் கூறப்பட்டது.

## பண்ணைப்பாலம் அமைத்தல் அங்கீகாரம்

### உடனே வேலை ஆரம்பிக்கத் தீர்மானம்

சென்ற திங்கட்கிழமை நடந்த போக்கு வரத்து நிர்வாகசபைக் கூட்டத்தில் பண்ணைப் பாலத்தை அமைப்பதற்கு உடனே வேலையை ஆரம்பிக்க வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

பகிரங்க வேலைப் பகுதியாரால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று திட்டங்களில் ஒன்றைத் தெரிந்தெடுப்பது நிர்வாகசபையாரால் யூலை மாசம் 12-ந் திகதிக்குப் பின் போடப்பட்டது.

## இங்கிலாந்தில் இலங்கை முஸ்லிம் பாரிஸ்டர்

புத்தளத்தைச் சேர்ந்த நிலச்சுவான்தாராகிய ஜனாப் எஸ். ஏ. எம். ஹனிபா மரிக்காரின் புத்திரரான ஜனாப். எம். எச். எம். செய்னு மரிக்கார் இங்கிலாந்தில் ஒரு பாரிஸ்டராகப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் ஒரு பிரிவி கௌன்ஸில் வழக்கில் அவர் ஏற்படுகிறு ரென்றும் அறியப்படுகிறது.

ஜனாப் செய்னு மரிக்கார் ஸஹிராக் கல்லூரியின் பழைய மாணவராவர்.

## டோக்கியோவில் சுபாஷ் போஸ்

லண்டன் யூன் 20—

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் ஜெர்மனியி லிருந்து டோக்கியோவிற்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் அங்கு இந்திய சுதந்திர இயக்கத்தை ஆரம்பித்துக் கொண்டிருப்பதாகவும் ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் அறிக்கையொன்று கூறுகிறது. ஜப்பானியப் பிரதம மந்திரியுடனும் அயல்நாட்டு மந்திரியுடனும் அவர் சம்பாஷணைகள நடத்தியதாகத் தெரிகிறது.

## ஜனங்கள் புல்லுந் தழையுந் தின்கிறார்கள்

கள்ளிக்கோட்டை யூன் 16—

கள்ளிக் கோட்டையிலும் மலையாளத்திலுள்ள மற்றத் தாலுக்காக்களிலும் அரிசிப் பஞ்சம் மிகவும் கடுமையாக இருக்கிறது. ஏரநாடு தாலுகாவில் சில ஜனங்கள் பசிக் கொடுமையைத் தாங்கமாட்டாது புல்லையும் தழைகளையும் தின்ன ஆரம்பித்திருக்கிறார்கள்.

## மாகாணத் தலைவர்மீது வழக்கு

### பீடியையும் லொறியையும் தடுத்ததாக

யாழ்ப்பாணம் செவ்வாய்

காரைநகரைச்சேர்ந்த திரு. A. S. சங்கரப்பிள்ளை யாழ்ப்பாண மாகாணத்தலைவரும் துறைமுகஅதிகாரியுமாகிய திரு. M. பிரசாத்மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இவ்வழக்கில் வாதி தாம் துறைமுகத் தீர்வையைக் கொடுத்திருக்கவும் அதைக் கொடுக்கத்தவறினர் என்ற முறையில் தமக்குச் சொந்தமான 62 மூடை பீடிகளையும் ஒரு லொறியையும் திரு. பிரசாத்தின் உதவி உத்தியோகஸ்தராகிய திரு. E. B. திசைவீரசிங்கி சட்டவிரோதமாகவும் பிழையாகவும் தடைசெய்து வைத்திருக்கிறாரென்று தமது முறைப்பாட்டிற் குற்றஞ்சாட்டியிருந்தார். அன்றியும், தமது பீடிகளையும் லொறியையும் இன்றேல் அவற்றின் பெறுமதியைத் தமக்குத் தரவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

திரு. பிரசாத் அதற்குப் பதில் அணைக்கும்போது குறித்த பீடிகளும் லொறியும் சட்டப்படியே தடுக்கப்பட்டனவென்றும் துறைமுகத் தீர்வை கொடுக்கப்படவில்லையென்றும் உதவித் துறைமுக அதிகாரி என்ற முறையில் திரு. திசவீரசிங்கிக்கு பீடிகளைப் பறிமுதல்செய்ய அதிகாரமுண்டென்றும் குறிப்பிட்டார்.

மேலும், வழக்குச் சரியானபடி தொடரப்படவில்லை யென்றும், ஏனெனில், பிழையானவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதென்றும், இவ்வழக்கு அற்றேணி ஜெனரல்மீது தொடரப்படவேண்டியதொன்றென்றும், இவ்வழக்குச் செலவோடு தள்ளப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பீடியின் விலை 7,000 ரூபாய், லொறியின் விலை 3,000 ரூபாய் மொத்தம் 10,000 ரூபாய்.

இவ்வழக்கு டிஸ்திரிக் நீதிபதி திரு. G. C தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வாதிபக்கத்துக்குத்திருவாளர்கள் A. R. சுப்பிரமணியம், C. தியாகலிங்கம், C. பொன்னம்பலம் வழக்கறிஞர் திரு. A. கனகசபை ஆகியோர் ஏற்பட்டிருந்தனர்.

பிரதிவாதியின் சார்பாக தற்காலிக சொலிஸிற்றர் ஜெனறல் மிஸ்டர். S. J. C. ஷொக்மன், அரசாங்க அத்துவக்காத் திரு. A. V. குலசிங்கம், மிஸ்டர். D. ஜான்ஸ், அரசாங்க வழக்கறிஞர் திரு. R. R. நல்லையா ஆகியோர் ஏற்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணை யூலை மாசம் 13-ந் திகதிக்குத் தவணை யிடப்பட்டது.

## திரு. தம்பிமுத்து சபையிலிருந்து விலக்கப்பட்டார்

சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் தலைவர் ஸேர் டப்ளியூ. துரைசுவாமி தலைமையில் அரசாங்க சபை முதல்வர் திரு. டி. எஸ். சேனநாயகா திரிகோணமலைப் பிரதிநிதியான திரு. இ. ஆர். தம்பிமுத்துவைச் சபையிலிருந்து வெளியேற்றுவதற்கான பிரேரணையொன்றைக் கொண்டுவந்தார்.

குறித்த பிரேரணை பின்வருமாறு:—

திரு. ஈ. ஆர். தம்பிமுத்து அரசாங்கசபை அங்கத்தவரென்ற முறையில் அல்லது உள்நாட்டு நிர்வாகசபை அங்கத்தவரென்ற முறையில லஞ்சம் வாங்கியதாக 1941-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 13ல தேசாதிபதி விடுத்த விசேஷ விசாரணைக் கொம்மிஷனில் நியமிக்கப்பட்ட கொம்மிஷனர் தீர்மானித்திருப்பதால அரசாங்கசபை அங்கத்தவர்களை வெளியேற்றும் சட்டத்தின் இரண்டாவது பிரிவிலுள்ள விதிகளின்படி குறித்த அங்கத்தவரை சபையிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.

ஸ்தல ஸ்தாபன மந்திரி மிஸ்டர். எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகா ஆமோதித்தார்.

இப்பிரேரணை பற்றிய விவாதம் நடந்தபின் சபையின் சம்மதம் கோரப்பட்டது. பிரேரணைக்குச் சார்பாக 36 பேரும் பாதகமாக 8 பேரும் [illegible] கலிலும் [illegible] நடுநிலைமை வகித்தனர்.

## சிஸிலி மீண்டும் தாக்கப்பட்டது

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேசத்தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று வெளியான அறிக்கையொன்று கூறுவதாவது:—இத்தாலியை நமது விமானங்கள் தொடர்ந்து தொடர்ந்து தாக்கி வருகின்றன. 19-ந் திகதியன்றிரவு நமது வெலிங்டன் வெடிகுண்டு விமானங்கள் மெஸினாவைத் தாக்கின. அங்குள்ள துறைமுகத்தில் நீராவிக்கப்பல்கள் வந்து நிற்குமிடமும் மற்ற ஸ்தாபனங்களும் தாக்கப்பட்டன. சிஸிலியிலுள்ள விமான நிலையங்களை நேற்று நமது விமானங்கள் தாக்கின. கேசல் வெட்ரானோவில் இராணுவ விடுதிகளும் காரியாலயங்களும் தாக்கப்பட்டன. பொரிஸோவிலும் மிலோவிலும் விமான நிலையங்களில் விமானங்கள் நிற்குமிடங்கள் தாக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளில் 16 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நமது விமானங்களில் ஐந்து திரும்பவில்லை.

## 108 அச்சு விமானங்கள் நாசம்

லண்டன் ஜூன் 20—

இன்றோடு முடிவடைந்த வாரத்தில் இங்கிலாந்து, ஐரோப்பா, வட ஆபிரிக்கா, மோல்டா மத்திய கிழக்கு ஆகிய இடங்களில் 108 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

## துருக்கியில் பெரும் பூகம்பம்

லண்டன், யூன், 21—

துருக்கியில் பூகம்பம் ஏற்பட்டதாக ஜெர்மன் றேடியோ அறிவிக்கிறது. ஸ்தான்புலுக்கு கிழக்கே 60 மைல் தூரத்திலுள்ள அடாபஸாரென்னும் நகரம் அடியோடு பூகம்பத்தால நாசம் அடைந்துவிட்டதென்றும் ஜெர்மன் றேடியோ கூறுகிறது. மேலும் கூறுவதாவது:—இஸ்தான்பில்லிலும் பூமியதிர்ச்சி இருமுறை இருந்தது. அதற்கு அருகிலுள்ள கீவ் என்னும் நகரத்திற்கும் பெருஞ் சேதம் ஏற்பட்டது. அங்காராவிற்கும் இஸ்தான்புல்லுக்கும் இடையே டெலிபோன் போக்குவரத்துத் தடைப்பட்டுவிட்டது. நேற்றிரவு இஸ்தான்புல்லிலிருந்து கிளம்பிய எக்ஸ்பிரஸ் வண்டி பூகம்பம் காரணமாக நின்றுவிட்டது. அங்காராவிலிருந்தும் இஸ்தான்புல்லிலிருந்தும் சேதத்தாற் கஷ்டப்படுகிறவர்களைக் காப்பாற்ற விசேஷ புகைவண்டிகள் விடப்பட்டிருக்கின்றன. ஆள் சேதம் ஆயிரக்கணக்காக இருக்குமென்று நம்பப்படுகிறது. இஸ்தான்புல்லில் சேதம் அவ்வளவாக ஏற்படவில்லை. ஏராளமான சுவர்கள் சரிந்து வீடுகள் நாசமாயின.

## சிரியாக்கரைக்கு அப்பால் கடற்படை முஸ்திபு?

ஈஜியன் கடலில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு நேசதேசக் கடற்படை சிரியாக் கரைக்கு அப்பால் தயார்செய்துகொண்டிருப்பதாக இப்பொழுதுதான் கிடைக்கப்பெற்றிருக்கும் அறிக்கையொன்று கூறுகிறதென்று ஜெர்மன் றேடியோ இன்றிரவு அறிவித்தது.

துருப்புகளை இறக்கும் மற்றும் ஓந்து கப்பல்கள் ஜிப்ரோல்டரிலிருந்து வடஆபிரிக்காவை நோக்கிப் புறப்பட்டிருக்கின்றனவென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் இன்று அறிவித்தது. ஒவ்வொரு கப்பலிலும் இரு பீரங்கிகளும இரண்டு விமானவீழ்த்திப் பீரங்கிகளும் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுடன் ஐந்து வியாபாரக்கப்பல்களும் சென்றன.

## வியாபாரி விடுதலையானர்

காலி, ஜூன், 21—

காலியைச் சேர்ந்த எ. எம். எம். சாலி என்னும் விற்பனைக்காரர் எழுதுவதற்கான இரண்டு டசின் காகிதத்தை விற்பனை செய்கையில் கொள்ளைலாபம் சம்பாதித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்ட்ரேட் திரு. எம். எம். மாரூப் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப் பட்டது. சம்பந்தமாக ரகக்காகிதத்தின் விலை ருததலொன்றுக்கு ரூபா 1 சதம் 76 ஆகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் ரூபா 4 சதம 80 விதம் இரண்டு டசின் காகிதங்களைக் காலியைச்சேர்ந்த வி. பிரான்ஸிஸ் என்பவருக்கு விற்பனை செய்ததாக இவ் வழக்கிற குற்றஞ்சாட்டப்பட்டது.

விசாரணையின்பின் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸு
ஆனிமீ" கoஉ வியாழக்கிழமை


## இந்தியாவின் புதிய பிரதிகாவலர்

இந்தியாவின் பிரதிகாவலராகிய லார்ட் லின்லித்கோவின் பின் அவருடைய பதவிக்கு இன்னொருவரை நியமிக்கும் விஷயம் பலமாசமாகப் பிருத்தானிய அரச தந்திரிகளால் யோசிக்கப்பட்டது; இந்திய பிரதிகாவலராயிருத்தலாகிய மேலான பதவியை வகித்தற்கு இந்த யுத்தகாலத்தில் எவரும் முன்வந்திலர். ஆனால், கீழைத்தேச பிருத்தானிய பிரதம சேனாபதியாகிய ஸேர். ஆக்ஷிபோல்உவேவல்என்பவர் இந்திய பிரதிகாவலராக நியமனம் பெற்றுள்ளாரென்ற செய்தி சடுதியில் வெளிவந்தது. இந்தச் செய்தி கீழ்நாட்டினராகிய இந்திய மக்களுக்கும் இலங்கைமக்களுக்கும் மாத்திரமல்லாமல், இங்கிலாந்திலுள்ள மக்களுட் பலருக்கும் ஆச்சரியத்தை விளைத்ததாம். இந்த நியமனம் தக்கதோ அன்றோவென்பதை இப்பொழுது சொல்லுதலும் ஆகாது, சொல்லவும் முடியாது.

இந்திய நாட்டிலுள்ள பிணக்குக்களும் மனரம்மியமின்மையும் இன்னபிறவும் உலகம் முழுவதுமறிந்த இரகசியம். இந்திய பிரஜைகளின் நோக்கமொன்றாகவும் இந்திய நாட்டைப் பரிபாலிக்கும் அரசினரின் நோக்கம் பிறிதாகவும் இந்த நேரத்தில் இருக்கின்றன. பிருத்தானியர் பகைவரை அடக்கும் படியாக அமெரிக்கருடன் சேர்ந்து அயிரோப்பாக்கண்டத்தில் ஹிட்லருக்கு மாறாகப் படையெடுத்துச்செல்ல நோக்கங்கொண்டுவிட்டனர். இப்படையெடுப்பு நிகழும்போது கீழைத்தேச பிருத்தானிய சக்கராதிபத்தியமாகிய இந்தியாவின் பாதுகாப்பு இன்றியமையாததாகும். இது மாத்திரமல்லாமல் அயிரோப்பாக் கண்டப் படையெடுப்பிற் பிருத்தானியஅமெரிக்க தத்துவ ராச்சியத்தினர் ஈடுபட்டிருக்கும்போது, கிழக்கே யப்பானியர் என்ன செய்வரோ என்பதை இப்பொழுது சொல்லமுடியாது. இவைகளையெல்லாம் உத்தேசித்தே பிருத்தானிய பிரதம மந்திரியாகிய மிஸ்ரர். ஸேர்ஜில் யுத்தத்திறமையுடையவராகிய சேனாபதி உவேவலை இந்தியப் பிரதிகாவலராக நியமித்தனர் எனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். மேலும் சேனாபதி உவேவல் அரசியல் ஞானத்திலும் குறைந்தவரல்லர் என்று ஆங்கில பத்திரிகைகள் பல பகருகின்றன.

இனி, சேனாபதிஉவேவலின் நியமன விஷயமாக, இந்திய பத்திரிகைகள் பலவாறு அபிப்பிராயப்படுகின்றன. மேலதிகாரிகள் இந்திய மக்களை அடக்கும்முறையை உத்தேசித்தே இவரைப் பிரதிகாவலராக நியமித்தனரெனக்கூறுகின்றனர். இவர் பிரதிகாவலராவதால், இனிமேல் இந்தியமக்கள் சுயராச்சியத்தைப்பற்றி இப்போதைக்குக் கனவிலும் நினைக்கவொண்ணாதென இந்திய பத்திரிகைகள் சில அபிப்பிராயப்படுகின்றன. முந்திய பிரதிகாவலருக்கு அரசியல் ஞானம் அதிகமில்லை; யுத்தஞானம் அறவேயில்லை, இப்புதிய பிரதிகாவலரேனிலோ பூரணமான யுத்த தந்திரத்துடன் அரசியல்ஞானமுடையவராகக் காணப்படுதலானும், இந்திய நிலைமையை இவர் முந்தியே நன்கு அறிந்திருத்தலினாலும் அவரைக்காட்டிலும் இவர் திறமையுடையவரென இந்தியபத்திரிகைகளுட் சில அபிப்பிராயப்படுகின்றன. எவை எப்படி நினைத்தாலும் சேனாபதி உவேவலின் பரிபாலன அநுகூலமும் பிரதிகூலமும் இப்பொழுது தீர்க்கமாக உரைக்கத்தக்கனவல்ல; அவை காலத்தைப் பொறுத்தனவாகும். காதல் காரணமாக நிகழுஞ் செயல்களுக்கும் யுத்தகாலத்திலே செய்யப்படும் செயல்களுக்கும் நியாய வரம்புண்டென நாம் எண்ணுதல் சாலாது. பிருத்தானியர் தங்கள் பரிபாலனத்திலிருந்து கீழைத்தேச மக்கள் தப்பிப் போகாது என்ன என்ன உபாயங்களைக் கையாண்டாலும், ஆளப்படுஞ் சாதியினராகிய கீழைத்தேச மக்கள் அவையெல்லாம் நன்மைக்கேயென்று மனரம்மியத்தோடு காலங்கழிப்பதல்லாமல், அதிகாரிகளை விபரீதமாக நினைத்தல் பிழையென்பதை உணர்ந்துகொள்ளல்வேண்டும்.

---

## 'விபசார விடுதி'ப் பிரேரணைக் கண்டனம்

அரசாங்கசபை அங்கத்தவரின் ஆலோசனை

யுத்தம் நடைபெறுங் காலம்வரை விபசார விடுதிகளை வைத்துநடத்துவதற்கேதுவான சட்டம் வேண்டுமென்று கோரி ஒரு தீர்மானங்கொண்டு வரப்போவதாக டக்டர், ஏ. பி டி. சொய்ஸா முன்னறிக்கை செய்தாரல்லவா? அத்தீர்மானத்துக்கு எதிர்ப்பு உருவாகி வருகிறது.

'தேவதூதன்' பத்திரிகையின் தலையங்கமொன்றின் இவ்வித சட்டம் நிறைவேற்றப்படுவது பலமாக ஆக்ஷேபிக்கப்படுகிறது. அத் தலையங்கத்தின் இறுதியிற் கூறப்படுவதாவது:

பெண் இனத்தவரின் மானத்தையும் நமது நாட்டினதும் நகரத்தினதும் கௌரவத்தையும் நமது போர்வீரர்களின் ஆரோக்கியத்தையும் பெரிதென மதிக்கும் அனைவரும் பல காரியத்தைச் சட்டரீதியானதாக்கச் செய்யப்படும் இந்த முயற்சியை எதிர் [illegible] நாம் கேட் [illegible].

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்)

## நாளைக்குக் கல்யாணம்

"மகளே காஞ்சனம், உன் அக்காளுக்குக் கல்யாணம் நடப்பது நாளையிரவு வரும் முகூர்த்தத்திலாம்; ஆனதனால் இப்பொழுது உங்கள் ஐயாவும் நானும் அங்கே போனால், அங்கு பார்க்க வேண்டிய கருமங்களெல்லாம் பார்த்துவிட்டு மீண்டு இங்கே வர இரவு பத்துப் பதினொரு மணிவரையிற் செல்லும்; ஆனதால் உனக்குத் துணையாக ஆரையும் ஒழுங்கு செய்து விட்டுப் போகலாமென்று யோசிக்கிறேன்" என்று சண்பகத்தம்மாள் சொல்லி முடிப்பதற்கிடையில், காஞ்சனம் "அம்மா, இரவு பத்துப் பதினொரு மணிக்கிடையில் இங்கு மீண்டு வருவீர்களானால், அதற்கிடையில், வேறுதுணை ஏன்? அம்மா; எங்கள் வேலைக்காரியிருக்கிறாள்; புதிதாய் வந்த சிங்களப் பெண் இருக்கிறாள்; அல்லாமலும் அடுத்த வீட்டுப் பொன்னுப் பாட்டியையும் படுக்கைக்கு இன்றிரவு இங்கேதான் வரச் சொல்லி யிருக்கிறேன்; பால்போல் நிலவெறிக்குங் காலத்தில், பக்கத்துணை அவசியமில்லை யென நினைக்கிறேன்" என்று தாய்க்குச் சமாதானஞ் சொன்னாள். மகள் சொன்ன வார்த்தையைத் தாயும் ஒப்புக் கொண்டாள்; புருஷனும் மனைவியும் பொழுதுபடும் நேரத்தில் தங்கள் இரதத்தில் ஏறிக்கொண்டு சின்னம்மாள் வீடு போய்ச் சேர்ந்து அங்கே பெண் வீட்டார் செய்ய வேண்டிய ஆயத்தங்களனைத்தையும் செய்யலாயினர். பெற்றார் போனபிறகு காஞ்சனம் வீட்டிற்கு விளக்கேற்றுதல் முகம் கால் கை சுத்தி செய்து விபூதி பூசித் தெய்வத்தைத் தியானித்தல் முதலிய நித்திய கருமங்களைச் செய்துவிட்டு, இராப் போசனத்திற்காக வேண்டிய உணவை ஆக்கும்படி தங்கள் பழைய வேலைக்காரியிடஞ் சொல்ல, அவளும் அப்படியே செய்து கொண்டிருந்தாள்; இதற்கிடையிற் பொன்னுப் பாட்டியென்னும் கிழவியும் அங்கே வந்து சேர்ந்தாள். பொன்னுப் பாட்டி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் நெருங்கிய உறவினர் எவருமில்லாத விதவையான கிழவி; இந்தக் காஞ்சனமாலை சிறுகுழந்தையாக இருந்த காலத்திலேயே இவள் எடுத்து ஒக்கலையில் வைத்து உலாவித் திரிந்தும் பாலூட்டியும் சோறு தீற்றியும் குளிக்க முழுக வார்த்தும் பராக்காட்டியும் அன்போடு வளர்த்து வந்தவள்; காஞ்சனம் தனது பேர்த்தியென்றே பொன்னுப் பாட்டி சொல்லி அவளிடத்தில் எந்தநேரமும் அன்பு பாராட்டி வருவாள்; தினமும் காஞ்சனத்தைக் காணாமல் பொன்னுப் பாட்டியும், பொன்னுப் பாட்டியைப் பாராமற் காஞ்சனமும் இருக்க மனஞ் சகிக்கமாட்டார்கள். அங்கே வந்த பாட்டி தன் கால்களை வசதியாக நீட்டியபடி இருந்துகொண்டு "பிள்ளை, உங்கள் அம்மா ஐயா இரண்டுபேரையுங் காணேன், எங்கே போய்விட்டார்கள்" என்று கேட்க, காஞ்சனம் அவர்கள் போன இடத்தையும் நோக்கத்தையும் கிழவிக்குச் சொல்லி, "பாட்டி, அம்மா ஐயா வரும்வரை நீங்கள் என்னுடன் இருந்து கொள்ள வேணும்" எனலும் "பிள்ளை, நான் இராமல் எங்கே போவது; வரும் வரைக்கும் மாத்திரமல்ல, உங்கள் அப்பா அம்மா வந்த பிறகும் நீர் [illegible] இருக்கக் கேட்டால் இருப்பேன் மகளே" என்று சொல்லிவிட்டு, "பொழுதுபட்டு எட்டு மணிக்குமேல் ஆய்விட்டதடியம்மா, நீர் போய் ஏதும் பசியாறிய பிறகு எனக்கும் குடிக்க ஏதும் கொண்டு வாரும்" என்று சொல்ல, காஞ்சனம் அப்படியே எழுந்து அடுக்களைப் புறம்போய்த் தானும் ஆகாரம் செய்து கிழவிக்கும் பசியாற்றினாள். கிழவி தனக்கென இடப்பட்ட ஒரு பாயலின் மேற் படுத்துக் கொண்டாள்; ஆனால், உறங்கவில்லை, காஞ்சனம் மீண்டும் அடுக்களைப் பக்கம் போய்த் தங்கள் வேலைக்காரியைப் பார்த்து, "இன்றைக்கு அம்மா ஐயா வரச் சற்று நேரஞ் செல்லும், ஆனதால் அவர்களை எதிர்பார்த் திருக்க வேண்டாம்; சிங்களப் பெண்ணுக்கும் ஆகாரங் கொடுத்து நீயும் உண்டுவிட்டு நான் இருக்குமிடத்திற்கு இரண்டுபேரும் வாருங்கள்" என்று கற்பித்துவிட்டுக் கிழவி கிடக்குமிடத்தை யடைந்து கிழவியோடு நானா வார்த்தைகளையும் பேசிக் கொண்டிருந்தாள்.

## "கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது"

அரைமணி நேரஞ் செல்ல, பணிப் பெண்கள் இருவரும் போசனம் முடித்து விட்டுக் காஞ்சனமாலையிருக்கும் இடத்திற்கு வந்து சிறிது தூரத்தில் ஒதுங்கி யிருந்தார்கள்; சற்று நேரஞ் செல்ல அவர்களுடைய பணிப்பெண் இருந்தபடியே உறங்கினாள்; சிங்களப்பெண் மாத்திரம் விழித்தபடி யிருந்தாள்; அதனை யுணர்ந்த காஞ்சனமாலை, "ஏன், உனக்கு நித்திரை வரவில்லையா" என்று கேட்க 'இல்லை அம்மா' என்று அவள் பதில் சொன்னாள். "அப்படியானால், அம்மா ஐயா வரும்வரை உந்த முற்றத்திலே போய் இருக்கலாம், பகல் போல நிலவா யிருக்கிறது; வருகிறாயா" என்று கேட்க, சிங்களச் சிறுமி அதற்கு உடன்பட்டாள்; அவளுடன் போய்முற்றத்திலே யுள்ளதாகிய ஆசனமொன்றில் காஞ்சனம் இருக்க, அதன் ஓரத்தே நிலத்தில் இருந்தாள் சிங்களத்தி. முருகேசபிள்ளை வீட்டுத் தலைவாசலுக்கும் தெருவிற்குமிடையேயுள்ள முற்றமானது மிகவும் விசாலமானது; அவருடைய வளவின் நாற்புறத்தும் சுற்றுமதில் முந்தியே அமைக்கப்பட்டுள்ளது. தெருவிலுள்ள அகலமான 'படலை' மூலமாகக் கார் வெளியே புறப்பட்டுப் போவதற்கும் மீண்டு வந்து தலைவாசலின் நிற்பதற்குமாக அம் முற்றத்தில் இரு பக்கத்திலும் மார்க்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்விரு மார்க்கங்கட்குமிடையே யுள்ள நிலத்தில் வட்டவடிவாக அமைந்த முற்றமொன்றுண்டு; அதனைச்சூழ ஒன்றரையடி அகலத்தில் 'சீமெந்து'ஆல் வரம்பு அமைத்து அதன்மேற் பூச்செடிகள் வளர்ந்துள்ள மட்பாத்திரங்களை நிரையாய் வைத்துள்ளனர். செவ்வந்தி, சிறியஜாதி றோசா முதலாம் சுகந்தத்தோடு கூடிய மலர்ச் செடிகளே பெரும் பான்மையும் அப்பாத்திரங்களிற் பொலிவொடு காணப்படுவன. அவ்வட்ட வடிவான சிறிய பூந்தோட்டத்தின் மத்தியிலே எண்கோணமாக அமைக்கப்பட்ட செங்கழுநீர்த் தொட்டியுளது. அதன் நாற்புறத்திலும் மல்லிகை கொடிச் சண்பகம் என்னுமிவைகள் பந்தரிற் படரும்படி விடப்பட்டிருந்தன; அப்பந்தரின்கீழ் இருவர் மூவர் ஏக காலத்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீமாஞ்ச தரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

(முற்றொடர்)

இந்தக் குமாரிலபட்டர் தந்திர வார்த்திகம் சுலோகவார்த்திகம் என இரு நூல்கள் இயற்றியுள்ளார். இவை இன்றும் உள்ளன.

இனி மீமாஞ்சையின்படி இப்பொழுதுள்ள நால்வேதங்கள் எவராலும் சொல்லப்படாதவை. மற்றையோர் சொல்வதுபோலக் கடவுளாலும் தரப்படாதவை. மீமாஞ்சகருக்குக் கடவுள் இல்லை. எனவே இவ்வேதங்கள் என்றுமுள்ளவை.

வேதங்களில் சில ரிஷிகளின் பெயர்கள் வருகின்றனவே, அவர் யார்? அவர்தான் நாம் வேதமந்திரங்களை அறியும்வண்ணம் புலப்படச் சொன்னவர்கள். அவருக்கு முன் வேதங்கள் பொதுமக்களுக்குப் புலப்படாமலிருந்தன.

கடவுள் ஒருவர் வேதங்களைச் சொன்னார் என்றால், வேதங்களுக்குக் கடவுள் மேலானவர் என்று வரும். அது பொருந்தாது. வேதங்களே மேலானவை. வேதங்களில் கூறும் உண்மைகள் முக்கியமானவையன்று, யாகங்கள் இயற்றுவதற்கு இட்ட விதிகளே முக்கியமானவை. அறம் என்பது யாகங்களுக்குரிய வேத விதி. இது சரி இது பிழை என்று வேதம் விதிக்கும். அதன்படி ஒழுகுவதே அறவொழுக்கம்.

வேத மந்திரங்களின்படி அவிப்பாகம் அக்கினி, சூரியன், வருணன் முதலிய கடவுளருக்குச் செல்லவேண்டும். சென்றால் அக்கினி நெருப்பைக் கொடுப்பான். சூரியன் ஒளி, சூட்டைக் கொடுப்பான். வருணன் மழையைக்கொடுப்பான். வேதகால மக்கள் தாந்தாம் வேண்டியவரத்தை யாகங்கள் செய்து, தாம் குறித்த கடவுளுக்கு அவி செலுத்திப் பெற்றுக்கொள்வர். மீமாஞ்சகர் அவ்வாறு கொள்வதில்லை. வேதங்களில கூறப்படும் கடவுளர் அக்கினி, ஆதித்தன் வருணன் தமக்கு வரம் ஈவார் என்பது அவருக்கு நம்பிக்கை இல்லை. அவர் கடவுளர் என்பதும் அவருக்கு நம்பிக்கை இல்லை.

நான் கொடுக்கிறேன் என்றால் இன்னாருக்கு இன்னதிற்கு என்று நான்காம்வேற்றுமை உருபு அமைய ஒரு வாக்கியம் வேண்டும். அதனால் தான் அக்கினிக்கு, ஆதித்தனுக்கு, வருணனுக்கு என்று வேத வாக்கியங்கள் வருகின்றன. இந்த வாக்கியங்களுக்கு ஏற்ப ஒரு பெயர்வழியைச் சொல்லி அவியை யாகத்தில் கொடுப்பதே யலலாமல் அந்தப் பெயர்களையுடைய கடவுளரை உவக்கச் செய்தல் கருத்தன்று. அல்லாமலும், இவ்வாறு யாகஞ்செய்வது தன் ஆன்ம சாந்திக்கோ? ஒழுக்கத் தூய்மைக்கோ? அவை நோக்கமும் அன்று. யாகஞ்செய்யும்படி வேதங்கள் ஆணையிடுகின்றன, அதனால் யாகம் செய்யவேண்டியது நியதியாய்விட்டது.

இதன் சம்பந்தமாக 8, 9 ஆண்டுகளுக்கு முன்னர் காசியில நடந்த ஓர் யாகத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். இதனை எனக்குச் சொல்லியவர் ஒரு காசிப் பண்டிதன். தென் இந்திய ஒரு தமிழ்ச்சாஸ்திரி காசிப்பல்கலைக் கழகத்தில் மீமாஞ்சை ஆசிரியராக இருந்துவந்த காலத்தில் கங்கைக்கரையில் ஓர் யாகம் செய்தார். அந்த யாகத்தில் ஓர் ஆட்டுக்கடாவைக் கொல்லவேண்டியது நியதியாயிருந்தது. கடாவுக்குக் கடலையைத் தின்னக் கொடுத்து வயிற்றை நிரப்பியபின் அதன் வாயைக்கட்டி, பின்கால்களையும் கட்டி வீழ்த்தி, உறுப்பு உறுப்பாகக் கிழித்து அவி கொடுத்தனராம். இச்செய்தி அவரை அவ்வாறு செய்யாதவண்ணம் முன்னரே தடுத்த காசிச் சநாதனிகளிடை ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணினதாம். இதனால், இன்றும்மீமாஞ்சை முறைப்படி யாகங்கள் நடந்துவருகின்றன என அறியுங்கள். இவற்றை நித்திய நைமித்திக கர்மங்கள் என அமைப்பர்.

இவற்றைச் செய்வது யாதாம் ஒரு பயன் கருதி அன்று. பயன் கருதாது செய்வதே செய்கை. செய்யவேண்டும் என்னும் நியதிக்காகவே செய்கை நிகழும், பயன் கருதியல்ல.

பயன் கருதாது செய்யப்படும் செயலுக்குப் பயன்தான் யாது? எச்செயலுக்கும் பயன் உண்டு. அப்படியாயின் பயன்கருதாத செயலுக்குப் பயன் என்ன? பயன் கருதிச் செய்த செயலுக்குப் பயன் என்ன? பயனைவிரும்பாமல் வேதம் விதித்தபடி செய்கிறேன் என்று செய்த செயலுக்குப் பயன் துறக்கம். துறக்கம் என்றால் சுவர்க்கம். யாகங்கள் ஈற்றில் இவது துறக்கம். யாகங்களை முறைப்படி செய்த ஒருவனின் உயிர் துறக்க உலகம்புதும். புகுந்து தன் தூயநிலையில் இருக்கும். இதுவே மீமாஞ்சகரின் முத்தி.

இனிப் பயன் கருதியசெயல் என்னத்தை விளைக்கும்? வித்தின்படியே விளைவு. எந்த இன்பத்தைக் கருதி ஒருவன் யாகஞ்செய்தானோ, அந்த இன்பத்தைப் பெறுவான். அந்த இன்பம் ஒழிந்ததும் துன்பம் விளையும். மீண்டும் வேறோர் இன்பத்தை விரும்புவான். இவ்வாறு இன்பமும் துன்பமும் மாறிமாறி அவன் அநுபவத்தில் விளைந்து கொண்டிருக்கும். இவ்வின்ப துன்பம் பிறவிக்கு ஏதுக்கள். உயிர் தசையொடு கூடியபொழுதே இன்ப விழைவு வரும். இன்பம் எப்பொழுதும் துன்பத்தைக் கூடக்கொண்டு வருகின்றது என்று ஒருவன் உணர்வானாகில் இன்பப் புலன்களில் தன் பொறிகளை விடாது அடக்கிக் கொள்வான். அடக்கியவனே மீண்டும் மீண்டும் பிறத்தற்கு ஏதுவாகிய கட்டுக்களை அறுக்கின்றான். அறுத்தகாலை பொறிகளோடு கூடிய உடலை உயிர்தள்ளி எறிகின்றது. அப்போது உயிரின் தூயநிலை தெளிவாகின்றது. உயிர்தன் தூயநிலையை உணர்வதில்லை.

உயிருக்கு உணர்ச்சி உடலொடு கூடியவழித்தான் உளதாகும் என்பது மீமாஞ்சகர் கொள்கை. அதனால்தான் தூயநிலையில் துறக்கத்தில் உள்ளது என்னும் உணர்ச்சி கூட, உடலை விட்டவழி உயிருக்கு இல்லை. அதனால் சதா இன்பம் என்று ஒன்று முத்தியில் உயிருக்கு இல்லை. முத்தியில் தானேயாய்ச் சும்மா இருத்தலை 'சுவஸ்த்தம்' என்பர்.

உயிர் ஒன்றோ பலவோ? ஒவ்வொரு உடலிலும் ஒவ்வொரு உயிர் உண்டு. அதனால் உயிர் பல. இனிப் பிறவிவரிசையில் வெவ்வேறு உடல் அமைதற்குக் காரணம் என்ன? ஓர் உடலில் ஈட்டிய கன்ம வினைக்கு இணங்க மற்றை உடல் கொள்ளும். கன்மவினைகள் வேறுபட வேறுபட உடலும் வேறுபடும். இவ்வாறு கன்மவினைகளே பிறவிக்குக் காரணமானதினால் கடவுள் ஒருவனும் தேவையில்லை.

பின்னை இவ்வுலகத்தை யார் படைத்தான்? என்றொரு கேள்வி. இவ்வுலகம் படைக்கப்படவில்லை. படைக்கப்பட்டால்தானே படைத்தவன் வேண்டும். இவ்வுலகம் என்றும் இப்படியே உள்ளது.

# திருநீலகண்டர் புராண சாரம்

வித்துவான் - ஆ. சிவலிங்கம்
தமிழ் விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்

உலகிற் பிறந்த நாம், துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடைய விரும்புகிறோம். இதனால் நம்மிடம் இன்பக் குறைவும், துன்ப நிறைவும் உண்மையை அறிகிறோம். இன்பம் நல்வினைகாரணமாக வருவது. இது கொள்ளத்தக்கது. துன்பம் தீவினை காரணமாக வருவது; இது தள்ளத்தக்கது. நல்வினையிற் சிறந்தது அறஞ்செய்தல். அறமாவது யாது? உண்டி, உடை, உறையுள் (இருப்பிடம்) கொடுத்தலாம். பொதுமையின் நோக்கின், வறியார்க்கு ஆவர்தம் வறுமையறிந்து வழங்குவது எனக் கூறலாம். வறிஞர்க்குப் பயன்படு நிலையிற் செய்வனயாவும் அறங்களே.

இவ்வறத்திற்கு இன்றியமையாச் சார்பாவது அன்பு அறம் செய்து இன்பத்தினையடைய விரும்புவோர் அன்பு உடையராதல் வேண்டும். "அறத்திற்கே அன்பு சார்பென்ப" என்ற வள்ளுவர் மொழியில், மறத்திற்கும் துணையாகக்கூடிய அன்பு, அறத்திற்கும் சார்பென்பது போதரும்.

இவ்வன்பு முதிர முதிர, அருள் தோன்றும். "அருளென்னும் அன்பீன் குழவி" என்ற குறளையும் காண்க. அருளாவது யாது? பகைவரும், நண்பரும் அல்லாத நொதுமலரிடத்தே தோன்றும் பற்றுள்ளம். அதாவது இரக்கம்.

அருள் காரணமாகத் தவம் பிறக்கும். தவமாவது யாது?

"உற்றநோய் நோன்றல்
உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்னும் பொய்யா மொழியைக் கண்டு தெளிக. இங்ஙனம் இயற்றப்படும் தவம் காரணமாகச் சிவம் வெளிப்படும். இச்சிவம் தரும் இன்பமே பேரின்பமாம். நல்வினை காரணமாக அடையும் இன்பமும் இதுவே. (சிற்றின்பங்கள் இப்பேரின்பத்திற்குமுன்னர்த்துய்க்கப்பட்டு வெறுக்கப்படுவனவாம். ஆதலின் அவற்றைப்பற்றி ஈண்டு கூறப்படவில்லை.)

இதுவரையும் நாம் அறிந்ததாவது: இன்பம் அடைய நல்வினை வேண்டும்; நல்வினையாவது அறம் செய்தல்; அறத்திற்கு அன்பு வேண்டும்; அன்பின் முதிர்வே அருள்; அருளால் தவம் பிறக்கும். தவத்தினால் சிவத்தைக் காணலாம்; சிவம் தரும் இன்பமே பேரின்பம் என்பன, இதனால் சிவம் தரும் இன்பத்தையடைய ஒருவனுக்கு அறம், அன்பு, அருள், தவம் ஆம் இவைகள் இன்றியமையாதன என்று அறிகிறோம். இவ்வுண்மையை வெளிப்படுப்பதே "திருநீலகண்டர் புராணம்." இவ்வுண்மையையே அப்புராணத்தின் சாரம். அதனை, இனிச் சரிதத்தில் நுழைந்து கண்டு மகிழ்வாம்.

தில்லை (சிதம்பரம்) மூதூரில் குயவர் குலத்துத் தோன்றி, "அற்புதத் தனிக் கூத்தாடும், நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கா"ராகி, சிவனின் நஞ்சு தங்கிய கண்டத்தை வியந்து "திருநீலகண்டம்," "திருநீலகண்டம்" எனப்பலகாற் கூறி, அதனால் "திருநீலகண்டர்" எனச் சிறப்புப் பெயர் வாய்க்கப்பெற்று "அருந்ததிக் கற்பின்மிக்க" மனைவியாரோடு இல்லறம் நடத்தும் நம் திருநீலகண்டர், "மன்றுளார் அடியார்க்கு என்றும், உளமகிழ் சிறப்பின்மல்க ஓடு அளித்து ஒழுகி"னர் என நம் சேக்கிழார் பெருந்தகையார் கூறுகின்றார். பேரின்பத்தை விரும்பிய நீலகண்டர் ஓடு அளித்தலாகிய அறத்தைச் செய்தனர் என ஈண்டு நாம் அறிய வேண்டும். "உளமகிழ் சிறப்பின்" என்றமையின் தம்மால் விரும்பப்பட்ட அடியவர்கட்கு அன்புடன் ஓடளித்தமை பெறப்படும். அன்றியும், தாம் காண்ட கூடா ஒழுக்கம் காரணமாகத் தம் மனைவியார் கொண்ட புலவி (ஊடல்) நீக்கவிரும்பி "வேண்டுவ இரந்து கூறி"னர் எனச் சேக்கிழார் கூறுமிடத்து, தமது மனைவிமாட்டு அடியவர் கொண்ட அன்பு வெளிப்படும். இதனால் அறத்திற்குரிய அன்புடையர் நீலகண்டர் என்பதை உணரலாம்.

மனைவியாரை மெய்யுற அணையச் செல்லுங்காலத்தில் "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" எனத் தமக்கு வைத்த ஆணையை மீறாத நீலகண்டர், தமக்குரிய-சொந்தமான-தம் வழி நடக்கும் கற்பின்மிக்க மனைவியாரை, "ஏதிலார் போல நோக்கி"னர். (ஏதிலார்-நொதுமலர்) தமது சொந்த மனைவியென்றோ, அன்றித தம் எண்ணத்தை நிறைவேற்றாது ஆணையும் வைத்தமையால் பகைமை உடையாள் என்றோ நோக்காது, நொதுமலர்போல நோக்கியது அருள் நோக்கு என்க. இதனால் நம் அடியவர் அருளுடையவராகின்றார்.

இவ்வருள் காரணமாகத் தவம் அவர்பால தோன்றியது. தமக்கு இளமை பாழ்படுதலாகிய நோயை (துன்பத்தை) மேற்கொண்டார். தமதெண்ணம் (மாதரைத் தீண்டாமை) கெட, மனைவியாம் உயிர்க்கு (வைத்த ஆணையை மீறுதலாகிய) உறுகணம் (துன்பம்) செய்தாரில்லை. ஆகத் தவத்தை மேற்கொண்டவர் நம் அடியார் என்பது தெரியும்.

"இந்நெறி ஒழுகும் நாளில்
எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையான் தானும்
தொண்டரை விளக்கங்காண
நன்னெறி யிதுவாம் என்று
ஞாலத்தார் விரும்பியுய்யும்
அந்நெறி காட்டு மாற்றால்
அருட்சிவ யோகி யாகி"

—பெரிய புராணம்

வந்தார் எனச் சேக்கிழார் கூறுகின்றார். தவத்தினை மேற்கொண்ட நீலகண்டரது நெறியினை உலகறிந்து உய்ய இறைவன் விரும்பி, சிவயோகியாகி வெளிப்படுகிறான். (வெளிப்பட்டு நீலகண்டர்பால் ஓட்டளித்துச் செல்லல் முதலிய யாவும் நாம் அறிந்தனவே. ஆதலின் கதையைத் தொடாது விடுகின்றேன்) இதனால் தவமுள்ள இடத்தில் சிவம் வெளிப்படும் என்பது தெரிகிறது. இக்கட்டுரையால் "திருநீலகண்டர் புராணசாரம்" வெளிப்படும்.

[மறைத் திரு ஞானியார் அடிகள் திருக்கோவலூரில் "திருநீலகண்டர்" என்பது பற்றி ஆற்றிய சொற்பொழிவில் யான் எடுத்த குறிப்பின் சாரம் இக்கட்டுரை. ஆ. சி]

—சித்தாந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இலங்கையில் பௌத்த மதம் பரவிய வரலாறு

## 2250 ஆண்டுகளுக்கு முன்வந்த மதப்பிரசாரகன் மகிந்தன்

### ஆனிப் பௌர்ணிமையன்று மிகுந்தலையில் தோன்றிய "புது யுகம்"

(கொழும்பு கோட்டாஞ்சேனை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி)

மிகுந்தலைமலை இலங்கைச் சரித்திரத்தில் மிகுந்த புகழ்வாய்ந்த தலம். இது கொழும்பிலிருந்து 130 மைலுக்கப்பால் உள்ளது. அநுராதபுரத்திலிருந்து கிழக்கே இம்மலை எட்டுமைல் தூரத்தில் இருக்கிறது. இம்மலைக்கு நாற்புறமும் காடு. அநுராதபுரத்திலிருந்து மிகுந்தலைக்குப போகும் வழி செப்பு மாளிகைக்கும அரசினர் விடுதிச்சாலைக்கும் இடையே உள்ளது. அந்நகரத்திலிருந்து இரண்டாம் கட்டைக்கும் மூன்றும் கட்டைச்கும் இடையே நகரத்தின் செய்கைத் தடாகமாகிய நுவரவாவியின் கரைக்கட்டைத்தாண்டி மிகுந்தலைக்குச் செல்லும் வீதி ஓடுகின்றது. மிகுந்தலையில் ஒரு சிறிய விடுதிச்சாலை இருக்கிறது. பௌத்தசமயம் வர முன்னரும் இம்மலை யோகசாதனைக்கு ஏற்ற மலையாகத் திகழ்ந்திருந்தது. இது மிஸ்ஸமலை எனப் பட்டிருந்தது. இராவணனுடைய மகன் இந்திரஜித்து யாகம் செய்த இடம் நிகும்பலை இராவணன்சிவ—ஆகம பத்தியுடையவன். இந்திரஜித்தவும் அவ்வாறு பக்திபூண்டவன். நிகும்பலை இப்பொழுதுள்ள மிகிந்தலைதானோ.... என்று ஆலோசிக்கக் கிடக்கின்றது. இம்மலை மிகிந்தலைக்கு அணித்தாக இருந்தது என்ப.

மிகுந்தலையை நாம் முதன்முதல் பார்க்கும்பொழுது மரங்களால் நிறைந்துள்ள சாதாரண மலையாகவே காணப்படுகிறது. அம்மலையின் கிழக்குப் பக்கத்தில் அடிவாரத்திலிருந்து மலையின் உச்சிக்குச் செல்லுவதற்குக் கருங்கற்படிகள் உற்று நோக்கிலுல்தான் தென்படுகின்றன. ஆயிரம் அடி உயரமுள்ள இம்மலைக்கு சுமார் இரண்டாயிரம் படிகள் (1840 படிகள்) அமைக்கப் பட்டிருக்கின்றன. இவைகளைக் குறிப்பாகக் கவனித்தால் அவை நான்கு கூட்டங்களாகச் செல்வதைக் காணலாம். இங்குள்ள படிகள்மீது ஏறி இங்கு காணப்படும் பண்டைச் சின்னங்களை ஒவ்வொன்வொன்றையும் ஆராய்வோம்.

முதலாவது படிக்கூட்டத்திற்கு மேல் ஒரு குறுகிய படிக்கட்டின் வழியே சென்றால் அழிந்த குகைகளைக் காணலாம். மூன்றாவதுபடிக் கூட்டத்தின் அரைவாசி வழியில் இடதுபக்கத்தேயுள்ள ஒரு குறுகிய வழிக்கூடாகச் சென்றால கறுாண்களால் தாங்கப்பட்ட சலதாரை இருக்கிறது. அதற்கு அப்பால் பெரிய கல்துரோணி (தொட்டி) உண்டு. மலைக்குமேல் சிறிது தூரத்துக்கு அப்பால் முக்கிய கோவில உண்டு. அங்கு காணப்படும் வாசற்படிகளுக்கு அணித்தாகச் சிலாசாசனங்கள் இருக்கின்றன. இவை பத்தாம் நூற்றாண்டில் வைக்கப்பட்டன என்ப. மூன்றும்படிக்கூட்டத்தின் உச்சியில் பிக்குகள் இருந்து போசனம் செய்த போசனசாலை இருக்கிறது.

கடைசிப் படிக்கூட்டத்தின் நடுவே ஒரு குறுகிய பாதை "நாக பொக்குன" எனப்படும் நாக-சர்ப்பச் சிலையுள்ள செய்கைத் தடாகத்துக்குச் செல்கின்றது. இத்தடாகம் நூற்றுமுப்பத்திரண்டு அடி நீளமுள்ளது. தண்ணீரிலிருந்து மேலே எழும்பி நிற்கும் பாவனையாக ஐந்து தலைநாகம் ஒன்று கருங்கல்லில் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நாகச்சிலை ஏழடி உயரமும் ஆறடியகலமுமுள்ளது. இந்நாகச்சிலையை அமைத்தவர்கள் பிக்குக்களுக்கு நோய்வாராமல் பாதுகாப்பதற்கு கையாண்ட ஒருவழி இதுவாகலாம். நாகவழிபாடு பண்டைக்காலத்து நாகர்கள், ஏன் நமது இந்துக்களாலும் இன்று நடைபெற்று வருகிறது.

இந்தத் தடாகத்தைக் கடந்து செல்வோமானுல், உச்சியில் உள்ள எற்விகாரைக்குச் செல்லலாம். இதைக்கடந்து சொற்பதூரத்துக்கு மேலே ஏறும்பொழுது "காமினி அபய" என்னும் பெயர் கல்லில் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அப்பெயர் கி. பி. 113ல அநுராதபுரத்தில் இருந்து ஆட்சிசெய்த கஜபாகு மன்னனைக் கருதும் என்ப. கஜபாகு மன்னனே சேரன் செங்குட்டுவனைச் சந்தித்து அவனுல் கண்ணகியின் வரலாற்றையும் தெய்வத்தன்மையையும் நன்கு உணர்ந்திருந்தவன். கண்ணகியையே பத்தினி தெய்வியோ எனச் சிங்களர் வணங்குவதுண்டு. நயினுதீவில் உள்ள நாகபூஷணி அம்மன்கோவிலில் மூலஸ்தானத்தில திருவாசியால் மறைக்கப்பட்டிருக்கும் ஐந்து தலை நாகபாய்புச் சிலை கண்ணகி அம்மனுடையது என்று கூறுப. நாகபொக்குன கஜபாகு மன்னனுல் அமைக்கப்பட்டிருக்கலாம்.

சிறிது தூரத்துக்கப்பால் மேலே ஏறினுல் அம்புஸ்தல தாதுகர்ப்பத்துக்கு நாம் செல்லலாம். அன்னங்கள் சித்திரிக்கப்பட்ட ஐம்பது எட்டுச் சதுரப்பட்ட தூண்கள் இத் தூதுகர்ப்பத்தைச் சுற்றிவரக்கிடக்கின்றன. இதற்குத் தெற்கே ஒரு உடைந்த சிலை கிடக்கின்றது. இது தேவநம்பியதீசனின் சிலையெனக் கூறப்படுகிறது. இத் தாதுகர்ப்பத்தில் மகிந்தனுடைய சாமபல் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறது.

மிகுந்தலையின் உச்சிக்குச் செல்வோம். அங்கே மகாசாய தாதுகர்ப்பம் உயர்ந்த படிமேடையுடனும் சுற்றுச்சாலையுடனும் இருக்கின்றன கௌதம புத்தரின் புருவங்களின் இடையில் இருந்த மயிரை அடக்கம்செய்துள்ள தாதுகர்ப்பம் இது. இங்கிருந்து சுற்றிவரஉள்ள காட்சி ஆநந்தமயமானது; பக்தர்களுக்குப் பரவசமூட்டும். அநுராதபுரத்தில் உள்ள முக்கியமான மூன்று தாது கர்ப்பங்கள் எங்கள் கண்களை ஈர்க்கின்றன. இயற்கைச்சோலை மத்தியில் திஸ்ஸ வாவியுடைய நீரும் நுவரவாவியுடைய நீரும்-வெள்ளியைப்போலப்பளபளக்கின்றன. தெற்கே "கற்றிவற கந்தை" என்னும் மலையும், றிற்றிகலை. என்னும் மலையும் வான் அளாவி நிற்கின்றன.

உச்சியிலிருந்து கீழே இறங்கி கால் மைல் வரையில் கிழக்கே செல்வோம். அந்து ஒரு மட்டமாக அமைக்கப்பட்ட கற்படுக்கை ஒன்றைக் காணலாம். அது மகேந்திரன் படுத்துறங்கிய படுக்கை எனக் கூறுவர். இதன் இடது பாகத்தில் ஓர் ஆழ்ந்த பள்ளத்தாக்கு; வலது பக்கத்தே......கம் என ஓர் அடர்ந்த காடு. கீழே பல குகைகள். இவை ஒரு காலத்தில் பௌத்த சந்நியாசிகளின் உறைவிடமாக விளங்கின. இப்பொழுது வௌவால்களே சஞ்சாரஞ் செய்கின்றன. இவற்றிற்கு அணித்தாக ஒரு காலம் பிக்குக்கள் நீராடிய—இப்பொழுது நிலமாகக் கிடக்கும் செய்கைத தடாகங்கள்.

அங்கு காணப்படும் கற்படிகளில பாளிமொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுவன இவை:—பரதொரு சிவனையும் கொல்லாதவர்களே இம்மலைக்கு அணித்தாக உள்ளனர். வெவ்வேறு வேலையாட்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வெவ்வேறு பணிகள் இருந்தன. பிக்கு சங்கத்தார் காலந்தோறும் நியமமாகக் கணக்குகளை வைத்துப் பரிசோதித்து வந்தனர். கோவிலிற் பணி செய்வோர் அனைவரும் பூககள் எடுத்துச் சாத்துவதற்காகப பூவிற்குப் பிறிம்பான தொகை கணக்கிணப்பட்டது. பௌத்தமதப் பிரசாரகர்களுக்கும் அவர்களின் உதவிச் செயலாளர்களுக்கும் குகை இருப்பிடங்கள் விடப்பட்டிருந்தன. எழுதல், தியானம், சந்தியாவந்தனம் முதலியவற்றிற்கு ஒரு நேரசூசிகை நியதி இருந்தது. நோயாளருக்கு ஏற்ற ஊண், பத்தியம் முதலியன உதவுவதற்கு ஒழுங்குகள் இருந்தன. காவற்காரன் தொடக்கம் பெரிய குரு வரைக்கும் இப்பரிசுத்தமான தலத்தில் ஒவ்வொருவருடைய கடமையும் ஒழுகவேண்டிய விதிகளும் எடுத்துரைக்கப்பட்டிருந்தன.

அம்புஸ்தல தாதுகர்ப்பம் கட்டியிருக்கிற இடத்திற்ருன் இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஆனிமாசப் பௌர்ணிமையன்று ஒருசம்பவம் நடந்தது. அதனுல் ஒரு புனருத்தாரணம்...இல்லை... ஒரு சமயப் புரட்சி;"புது யுகமே" ஏற்பட்டது எனலாம்.

—வரும்

## வாரிவனநாத சிவன் கோயில் மகோற்சவம்

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் சுபானு ஞு ஆனி மீ 16-ந் திகதி (30-6-43) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் ஆரம்பமாகும்.

ரதோற்சவம்—வியாழக்கிழமை (8-7-43)

தீர்த்தோற்சவம்—(ஆனியுத்தரம்) வெள்ளிக்கிழமை (9-7-43)

—கடித

## விளம்பரம்

கதிர்காமத்தில் நடைபெறும் வருடாந்த எசல திருவிழா 1943ம் ஆண்டு ஆடிமாதம் 2ந் திகதி தொடக்கம், ஆடி மாதம் 18ந் திகதிவரை நடைபெறுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது. தீர்த்தம் ஆடிமாதம் 18ந் திகதி நடைபெறும்.

2. திருவிழாவிற்குச் செல்லும் யாத்திரீகர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் தேவையில்லை.

3. கதிர்காமத்தில் உணவுப்பொருட்கள் கிடைப்பது நிச்சயமில்லாததாகையால், யாத்திரீகர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் உணவுப்பொருட்களைக் கொண்டுபோகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. யாத்திரீகர்கள் 1943ம் ஆண்டு ஆனிமாதம் 11ந் திகதி பிரசுரிக்கப்பட்ட, இலங்கை அரசாங்கப் பத்திரிகையில் (கசெற்றில்) விதிக்கப்பட்டிருக்கும் பிரமாணங்களுக் கிணங்க நடக்கவேண்டும்:

5. கதிர்காமப் பாடிபெல்லைக்குள், கீழே விபரிக்கப் பட்டிருக்கும் இடங்களிலல்லாது வேறு இடங்களில் சாப்பாட்டுக் கடைகளாயினும் அல்லது தேநீர் கோப்பிக் கடைகளாயினும் நடத்த விடப்படமாட்டாது. இடங்களாவன:—

(1) வெளிவீதி
(2) உள்வீதி
(3) புத்தளை வீதி
(4) மகா தேவாலகறஸ்வீதியின் முற்பக்கத்துள்ள தெய்வயானை அம்மன்கோயிலின் எல்லையோரம்
(5) டெற்றகமுவ கிராமம்

அனுமதிச் சீட்டுகள் பெறவிரும்புவோர், உணவுகளை ஈ முதலியன அசுத்தப்படுத்தாமாறு வைத்தற்குப் பெட்டிகளும், பாத்திரங்களைக் கழுவுதற்குரிய கழிவகைகளும், அழுக்குப் பொருட்களைப் போடுதற்கு ஓர் கூடையும் தேடிக்கொள்ள வேண்டும்.

6. கதிர்காமப் பாடிபெல்லைக்குள் இருக்கும் ஆற்றங் கரையோரங்களில் கடைகள் நடத்த விடப்படமாட்டாது.

7. மாணிக்ககங்கையின் வலப்பக்கத்தில் திசைமாறு—கதிர்காமம் தெருவின் கிழக்குப்பக்கத்தில் 35 அடிக்கு அப்பாலுள்ள இடங்களிலல்லாது கதிர்காமப்பாடிபெல்லைக்குள் மற்றெவ்விடங்களிலும் பாபர்சாப்புகள் நடத்த விடப்படமாட்டாது.

8. ஊவா மாகாணாதிபதியிடமிருந்து (கவண்மென்ற் ஏசண்டு) அனுமதிச் சீட்டுப் பெற்றாலன்றிக் கீழே சொல்லப்பட்ட தொழில்கள் ஒன்றும் ஒருவரும் பாடி எல்லைக்குள் நடத்தக்கூடாது. தொழில்களாவன:— கோதுமைப்பப முதலியன விற்றல், சோடா செய்யும் தொழிற்சாலை நடத்தல், தேநீர் காப்பிக்கடை நடத்துதல் முதலியன, அனுமதிச் சீட்டுகள் பெறவிரும்புவோர் புத்தளை டிவிஷனல் டெவனியூ ஓபிசருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும். இவ்வித அனுமதிச் சீட்டுகள் செலவின்றி இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வதுளைக் கச்சேரி, 1943ஞு ஆனிமீ 16உ.
கி. குமாரசுவாமி, ஊவாமாகாணாதிபதி,
(G 11 24-6-43)

# ஓரியன்ரல் பாங்க் ஓவ் மலாயா லிமிற்றெட்

(ஐக்கிய மலாய் நாடுகளில் பங்காளரின் நிதி வரைவுளதாய் நிறுவப்பெற்றது)

## 8, மணிக்கூட்டுத்தெரு, யாழ்ப்பாணம்

மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் அனுமதியும் அங்கீகாரமும் பெற்று வடஇலங்கையில் சகலவித வங்கித்துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கும் **தேசியவங்கி** இது ஒன்றே.

இவ்விடத்தில்:—

1. நடைமுறை, நிரந்தரக் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளுதல்;
2. அங்கீகரிக்கக்கூடிய தகுந்த பொறுப்புக்கு இலகுவானமுறையில் வட்டிக்குக் கடன்கொடுத்து வாங்குதல்;
3. இந்தியாவின் சகல பட்டினங்களுக்குத் தந்தியுண்டியல்களும்; கொழும்பு, மதுரை, சென்னை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செக்குகளும், உண்டியல்களும் பரிமாறுதல்;
4. இந்திய நோட்டுகள் வாங்குதல் விற்றல் முதலியன சகலருடைய வசதிக்குமேற்ப நடைபெற்று வருகின்றன.

எஸ். பீ. யோசேப்,
மானேஜர்.

(Mis. 406. 25-2-43—24-8-43) (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தில் இருக்கக் கூடிய சாய்மணை யோடு கூடிய ஆசனங்கள் ஒவ்வொன்றுண்டு. அவற்றின் அயலே முல்லை பிட்சி முதலிய செடிகளும் பூத்தபடியே நின்றன. இரதஞ் சென்று மீண்டு வருவதற்காக அமைந்துள்ள வட்டவடிவான வழியின் அப்புறத்தும் மதிலின் உட்புறத்துமுள்ள நிலத்தில் வாழை, கமுகு, ஈரப்பலா, சிறிய செவ்விள நீர் மரம், ஒட்டு மாங்கன்று, எலுமிச்சி, தோடை, நாரத்தை முதலியன பசுமையோடு வளர்ந்துள்ளன. இப்படியான சிறிய சோலையின் மத்தியிலே அமைந்துள்ளதாகிய பூந்தோட்டத்தி லுள்ள மல்லிகைப் பந்தரின்கீழ் வைக்கப்பட்ட ஆசனமொன்றிலேயே, முன் சொன்ன பிரகாரம் காஞ்சனமாலை சாய்ந்தபடி யிருந்தாள். காலம் வசந்த காலம், மாசம் ஆனி, பூரணைக்கு மிக அணித்தாகவுள்ள வெண்ணிலாவோடு கூடிய இரவு; அயலிலேயுள்ள பூக்களின் நறுமணத்தைக் கவர்ந்து கொண்டு தவழும் தென்றல் இடையிடையே அவளுடைய மேனியிலும் தீண்டிக் கொண்டு அப்புறம் நழுவிச் சென்றது; அந்த மந்தமாருதத்திற் கலந்துள்ள சுகந்தம் அவளது குமிழ மலரன்ன நாசியுள் இடையிடையே புகுவதும் மீள்வதுமாயிற்று; விட்டு விட்டு ஒளி செய்யும் தாரகைகளின் மத்தியிலே சந்திரன் அரசு வீற்றிருந்து விளங்குவதை அவதானித்தாள்; பதினறு கலைகளில் இன்னும் இரண்டு மூன்று கலைகள் வந்து சேராமையாற் சந்திரன் பூரணமாகாமல் இருத்தலையும் உற்று நோக்கினள்; காற்றினல் அள்ளுண்ட வெள்ளிய முகில் அச்சந்திரன்மீது ஊரும்போது நிலவொளி குன்றுவதையும், அம்முகில் விட்டகலும் போது பழையபடி நிலாப் பரத்தலையும் பார்த்தாள்; கவலையும் மகிழ்ச்சியும் மாறிமாறி நிகழ்வது சகசந்தானே யென்று மனத்தில மதித்தாள்; மதியிடத்துள்ள மறுவை உற்று யோசித்தாள்; பெண் மதியால் தனக்கு முந்திநேர்ந்த மாசினை மனத்தில் உன்னி வருந்தினள். ஆரம்பத்திலே தனக்கும் சுந்தரேசுவரனுக்கும் இடையே காதல் மூண்டதையும், பின்னர் விதியின்படி மதிசெல்ல அக்காதல் மாண்டமையையும், அடுத்தநாள் நிகழப் போவதாகிய மங்கல கருமத்தையும் ஒன்றொன்ருய் யோசித்தாள்; நெட்டுயிர்த்தாள், "வகுத்தான் வகுத்தபடியல்லாற் கோடி-தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்ற தமிழ் வேத வாக்கை நினைத்தாள்; முன்னொரு போதும் நேராத ஒரு விகாரமான உணர்ச்சி அவளுடைய உள்ளத்தையும்உடம்பையும் பேதித்தது. அவள் "...... தாவிக்குல மயில்வாகனனே துணை யேதுமின்றித்-தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடி போல்-பாவித்தனி மனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே" என்ற பாட்டை, தன்னை மறந்தவளாய் இன்னிசையுடன் பாடினள்.

## "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை"

கீழேயிருந்த சிங்களச் சிறுமி தன் எஜமாட்டி ஏதோ சொப்பனங் கண்டு 'வாய்புலம்பு'கின்ருள் என்றெண்ணி "அம்மா, என்ன" என்று பரிவுடன் கேட்க "ஒன்று மில்லை யென்றுசொல்லி நாணுற்றவளாய்க் காஞ்சனம் "நீ உறங்கி விட்டாயென்று எண்ணியல்லவோ நான் இதுவரை உன்னுடன் பேசாமலிருந்தேன்; அதுசரி உன் பெயரென்ன? முந்திக் கேட்டு வைக்க மறந்தேன்" என வினவுதலும், சிங்களச் சிறுமி "என் பெயர் மெனிக்கா, ஆனல் நான் முந்தி வேலைக்கிருந்த வீட்டிலுள்ள ஐயா என்னை மேனகா என்று கூப்பிடுவது வழக்கம்" என்று விடை சொன்னள்; நானும் இனி உன்னை அப்படியே கூப்பிடுகிறேன்; நிற்க, நீ இவ்வளவு நேரமும் என்ன யோசித்துக் கொண்டிருந்தாய்" என்று காஞ்சனம் கேட்க, அவள் "வேறொன்று மில்லை, அம்மா. என்னுடைய தனித்த நிலைமையை யிட்டு யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்று பதில் சொன்னள். "மேனகா, நீ ஒன்றுங் கும் பயப்படாதே,கவலைப்படாதே; நீ எங்கும் போகவேண்டாம் எங்களுடனே எந்நாளும் இருக்கலாம்; உன்னிடத்தில் எனக்கு அதிக விசுவாசம் உண்டாகிறது" என்று காஞ்சனம் பரிவுடன் பகர்ந்து, குனிந்து அவள் முதுகைத் தடவினள்; இருந்த சிங்களச்சிறுமி உடனே எழுந்து நின்று, உடல்நடுங்க உள்ளம்பதைக்க "என்அம்மா இந்த ஏழைமேல் இவ்வளவு இரக்கம்" என்று சொல்லிக் கும்பிட்டுத் தன் கண்களில் நீர் சொரியச் சொன்னள்; "மேனகா, அழாதே, கவலைப்படாதே, என்னைப்போலவே நீயும் ஒரு கன்னிகை, எனக்குப் பெற்ரர்உண்டு; உனக்கு அவர்கள் இல்லை; எங்கள் அம்மாவையும் ஐயாவையும் உன் தாயும் தகப்பனுமாகப் பாவித்துக்கொண்டு என்னையும் உன் சகோதரியாக எண்ணிக் கொண்டு எங்களுடன் ஒரு குறைவுமில்லாமல் இரு; என்னை யறியாமலே என் மனம் உன்னிடத்திற் படிந்துவிட்டது" என்று சொல்லிக் காஞ்சனம் அவளைத் தேற்றினள்; காஞ்சனம் தான் அப்படித் தேற்றவும் அவள் தேருது நின்று பதறுவதையும் அழுவதையும் அவதானித்து, "மேனகா, ஏன் பதறுகிருய், அழுகின்ருய்? உனக்குவந்த கேடென்ன? உள்ளதைப் பயப்படாமற் சொல்லு" என்று பின்னரும் பரிவுடன் கேட்டாள்; "அம்மா, என் அருமையான அம்மா. நீங்கள் நினைக்கிறபடி நான் நல்லவளல்லேன்; நான் துரோகி, உங்களுடைய பெருந்தன்மையை அறியாமல் உங்களுக்கு மோசஞ் செய்யத் துணிந்துவந்தேன்; நான் இங்கு வந்த நோக்கத்தைச் சொல்லிவிட்டு உடனேஇந்த வீட்டை விட்டு ஓடிப்போய் விடுகிறேன்; அதுவரைக்கும் என்பிழையைப் பொறுத்து நான் சொல்வதையும் பொறுமையோடு கேளுங்கள்" என்று சொல்லி இரந்தாள். இவைகளை ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்த காஞ்சனம் சிரித்து, "மேனகா, எனக்குத் துரோகஞ் செய்ய எவராலும் முடியாது. நான் இற்றைவரையில் எவருக்கேனுந் துரோகஞ்செய்ய நினைத்த தில்லை. எனக்குக் கேடு சூழ்வோர் தமக்கே கேடு சூழ்வோராவர்; நீ ஏதோ ஏவற்பேய்போற் காணப்படுகின்ருய்; ஆனதால் உன்மீது ஒரு குற்றமுமில்லை; உள்ளதைச் சொல்லு" என்று ஆவலுடன் கேட்க, மேனகா சொல்லலானள்:-

## "இன்னு செய்தார்க்கும் இனியவே செய்க"

"அம்மா, நான் முந்தி உங்களுக்குச் சொன்ன வரலாற்றில் அந்தச் சிங்கள டக்ரர் வீட்டைவிட்டு நேரே இங்கே வந்தேன் என்று சொன்னது தவிர மற்றவையெல்லாம் உண்மை, நான் அந்த டக்டர் ஐயா வீட்டிலிருந்து புறப்பட்டுக் கவலையோடு தெருவழியே வரும் போது ஒரு தமிழ் உத்தியோகத்தர் பொலிஸ்பகுதியில் வேலையாக விருப்பவராம்; என் வரலாற்றைக் கேட்க நான் உள்ளபடி அவருக்கு முறையிட அவர் என்னைத் தன் வீட்டிற் கூட்டிக்கொண்டு போனர்; சில நாள் நான் அங்கே அவருக்குச் சமையல்வேலை செய்துகொண்டு இருந்தேன்; அப்படியாக அவர் ஒருநாள் என்னைத் தனியே கூப்பிட்டு உனக்குப் போதுமானபணந் தருகின்றேன்; சட்டை சாரம்வாங்கித்தருகிறேன், சவர்க்காரம் "பௌடர்" வாங்கித் தருகிறேன். நான் சொல்லுகிறபடி ஒன்று செய்கிருயா என்று இதமாகக் கேட்டார்; நான் சிறிதுயோசித்துவிட்டு செய்யத்தக்க தென்ருல் ஐயா, நான் செய்கிறேன் என்றேன். செய்யத்தகாததைச் செய்யும்படி கேட்பேனு என்று அவர் பதில சொல்லிவிட்டு, இன்ன தெருவிலுள்ள இன்ன வீட்டில் ஒரு இளம் பெண் இருக்கிருள், அவளைக் கல்யாணஞ்செய்ய எனக்கு விருப்பம், ஆனுற் பெண்பகுதியார் உடன்படுகிருரில்லை; நீ அங்கே போய்ச் சில காலம் அவர்களுக்கு வேலைக்காரியாகவிருந்து அந்தப் பெண்ணுக்கு இதமாக நடந்து அவளோடு நல்லாய்ப்பழகி அவள் மனத்தை என் பக்கம் இணங்கச்செய்; அப்படிச் செய்யமுடியாத பட்சத்தில் இராக்காலத்தில் அவள் தனியேயிருக்கும் சமையம் பார்த்து மெல்லப் புறப்பட்டுவந்து எனக்கு இரகசியமாகத் தெரிவி; அதன்பின் நான் ஆகவேண்டியதைப் பார்த்துக் கொள்வேன்; இப்படி நீ செய்தால் உனக்கு நான் ரூபா 100 தந்து உங்கள் சாதியில் கல்யாணமும் முடித்து வைப்பேன்; இது சத்தியம் என்று வாக்குப் பண்ணினர்; அவருடைய வஞ்சகப்பேச்சில் நான் ஏடுபட்டு, அதற்குஒம்தான்; ஆனுல் வீடு தெரியாதென்றேன்; அவர் தான், அம்மா, அன்று என்னுடன் வந்து உங்கள் வீட்டைக்காட்டி இங்கேஎன்னைப் போகச்சொன்னர்; அதன்பிறகும் இடையிடையே இராக்காலத்தில் இந்தத் தெருவழியே அவர் போவது வருவதுமுண்டு; அம்மா, இதுதான் உண்மை, இனிமேல் ஒரு நிமிஷமும் இந்த வீட்டில் நான் நிற்பதற்கு எனக்கு யோக்கியமில்லை; நீங்கள் செய்த நன்மையைச் சீவனுள்ள பரியந்தம் மறக்கமாட்டேன்; உங்களுக்கு நான் ஏதும் துரோகம் நினைத்தால், புத்தபகவான் மேல் ஆணை, அம்மா, நான் உண்ணச் சோற்றுப் பருக்கைக்கும் உடுக்கத் துணிக்குங் கதியற்று நாசமாய்ப் போய்விடுவேன்; நான் செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டு, போக உத்தரவு தாருங்கள் அம்மா என்று காஞ்சனத்தைக் கும்பிட்டாள். போகப் புறப்பட்டவளைக் காஞ்சனம் கையிற்பிடித்துத் தடுத்து "மேனகா, உன்னில் ஒருபிழையுமில்லை. நீ எனக்கு ஒருபோதும் துரோகஞ்செய்யமாட்டாய். இதை அம்மா ஐயாவுக்குச் சொல்லாதே; கவலைப்படாமல் இங்கே தான் இரு என்று தேற்றினள். இப்படித்தேற்றிக்கொண்டு நிற்கும்போது ஒரு மோட்டரதம் அவர்களுடையவீட்டுத் தெருவாசலில் வந்து நின்றது; தங்கள் தாயும் தகப்பனும் வந்துவிட்டார்கள் என்று காஞ்சனம் நினைத்தாள்; தெருவாசற் பக்கம் மெனிக்காவுடன் போனள்; தங்கள் இரதமல்ல என்பதை அவதானித்தாள். உடனே மீண்டு வந்து பூந்தோட்டத்தில் மனத்திடத்தோடு பழையபடி இருந்தாள். (வரும்)

## யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டம்

நிகழும் சுபானு ஞு சித்திரை மாதம் உரு(6.5-43) வியாழக்கிழமை மேர்படி முதலாவதாண்டு நிறைவுவிழா, ஏழாலை, கருணுகரப்பிள்ளையார் திருமடாலயப் பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் நால்வர் சந்நிதியில், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் உயர்திரு. க. வச்சிரவேலு முதலியார், B.A.L.T. அவர்கள் தலைமையில் நிறைவெய்தியது.

இரண்டாம் ஆண்டுச் செயலாளர்கள் தலைவர் திரு. சு. நடேசபிள்ளை B. A., L. T. உபதலைவர்கள் திரு. ஐ. பொன்னையா அவர்கள் ஏழாலை திரு. கு. கனகராயர் அவர்கள் தெல்லிப்பழை திரு. பண்டிதர் வீ. நடராசா அவர்கள் மீசாலை, திரு. பண்டிதர் சு. இராமசாமிப்பிள்ளை அவர்கள் இடைக்காடு, திரு. சி. செல்லையாபிள்ளை அவர்கள் திக்கம், உபதலைவர்கள் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் யாழ்ப்பாணம் காரியதரிசிகள் திரு. மு. ஞானப்பிரகாசம் (B.A., B.SC) அவர்கள் ஏழாலை திரு. பொ. கருணுகரர் அவர்கள் மேலைத் தெல்லிப்பழை, தனதிகாரிகள் திரு. பொ. அம்பலவாணர் அவர்கள் தெல்லிப்பழை திரு. இ நமசிவாயம் அவர்கள் விழிசிட்டி,

திருவாகசபை அங்கத்தவர் திரு. சி. முருகேசு (கச்சேரிப் பிரதம லிகிதர்) அவர்கள் யாழ்ப்பாணம், திரு. வி. சங்கரப்பிள்ளை அவர்கள் பன்னலை, திரு. பொ. அருணுசலம் அவர்கள் அளவெட்டி, திரு. வே சிற்றம்பலம் அவர்கள் மாவிட்டபுரம், திரு. பண்டிதர் கா. நமசிவாயம் அவர்கள் கொக்குவில் திரு. சி. நவரத்தினம் சுன்னுகம், திரு. மு. கந்தையா ஏழாலை, திரு. வே. சங்கரப்பிள்ளை விழிசிட்டி, திரு. செ. சிவசுப்பிரமணியம் விழிசிட்டி, திரு. க. கி. நடராசா யாழ்ப்பாணம், திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை கொல்லங்கலட்டி.

—கடிதம்

## "ஒன்றிருக்க இன்னென்று கேட்கிருர்களே"

இப்போது இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்ற லண்டன் மற்றிக்குலேஷன் பரீக்ஷைக்கு ஆங்கில இலக்கிய வினுப்பத்திரங்களைத் தயாரித்தவர்கள் இழைத்த ஒரு தவறின் பலனுக விசித்திரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு மற்றிக்குலேஷன் பரீக்ஷைக்குக் குறிப்பிட்டிருந்த இலக்கிய பாடப்புத்தகங்களே இவ்வாண்டும் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கல்விப்பகுதி அதிகாரிகள் லண்டன் சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு அறித்ததாகவும் இதனைச் சர்வகலாசாலை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டபின், இந்தவருடப் பரீக்ஷைக்குள்ள பாடத்திட்டத்திற் கல்விப்பகுதி அதிகாரிகள் அதே பாடப்புத்தகங்களைக் குறிப்பிட்டதாகவும் அறியப்படுகிறது.

### அச்சமுங் கலக்கமும்

ஆயின் சென்ற வியாழக்கிழமை பரீக்ஷார்த்திகளுக்கு ஆங்கில வினுப்பத்திரங்கள் கொடுக்கப்பட்ட போது அவ்வினுப்பத்திரத்திலிருந்த சில வினுக்கள் தாங்கள் நெட்டுருப்பண்ணிய எந்தப் புத்தகத்திலும் குறிக்கப்படாத விஷயங்களென்பதைப் பரீக்ஷார்த்திகள் கண்டுகொண்டனர். உடனே இத்தகைய சந்தர்ப்பங்களிற் பரீக்ஷார்த்திகளுக்குச் சகசமாக ஏற்படும் அச்சமும் கலக்கமும் அவர்களுக்கு ஏற்பட்டது. பல பரீக்ஷார்த்திகள் விடைப்பத்திரத்திலே ஒன்றும் எழுதாமலும் வேறுயோர் சில விஞக்களுக்கு விடையளித்தும் விடைப்பத்திரங்களைக் கொடுத்துச் சென்றனர்.

பரீக்ஷார்த்திகள் படிக்காத புத்தகங்களிலிருந்து வினுக்கள் கேட்கப்பட்டிருந்தது மாத்திரமன்றி அவர்கள் கஷ்டப்பட்டு நெட்டுருப்பண்ணிய புத்தகங்களிலிருந்து வினுக்கள் கேட்கப்படவில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது.

வித்தியா கர்த்தருக்கு நிலைமை அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் பரீக்ஷைக்கும் குறிக்கப்பட்ட புத்தகங்களிலிருந்து வினுக்கள் தயாரித்து விடைப்பத்திரங்களை லண்டனுக்கனுப்பும் விஷயத்தை அவர் ஆலோசித்து வருவதாகவுந் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் ஸ்ரீமதி. K. தவமணிதேவி

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியின் வியப்புரை

(நமது நிருபர்)

வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் சென்றசெவ்வாய்க்கிழமை 22-6-43 இரவு இரண்டாவதாக இலங்கை நடிகைத் திலகம் ஸ்ரீமதி K. தவமணிதேவியின் சங்கீதம், பரதநாட்டியம் முதலியன நடைபெற்றன. அம்மண்டபத்தில் ஆடவரும் மகளிரும் பன்னூற்றுக்கணக்கானோர் குழுமியிருந்தனர். யாழ்ப்பாணப் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற சங்கீதம், பரதநாட்டியம் என்னுமிவைகளிலும் பார்க்க ஷை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றவை மிகச் சிறந்தவையென்பது பலருடைய அபிப்பிராயம். அங்கே அச்சமயத்திற் சமுகமாயிருந்த யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி திரு G. C. தம்பையா அவர்கள் தவமணிதேவியின் சங்கீத, பரதநாட்டியத்திறமைகளைப்பற்றிவியந்து பின்வருமாறு கூறினார்:-

தவமணிதேவியின் இசைப்பயிற்சியும், இனிய கானமும் விரும்பத்தக்கன. பரதநாட்டிய சாஸ்திரத்தைப்பற்றிய நுட்பமான அறிவு இச்சிறுபெண்மணியிடத்து உண்டு. இப்பெண்மணி நாட்டியகாலத்தில் செய்யும் அபிநயம் முதலியன இந்தியாவிலும் சிலரினுஞ் சிலரிடத்தே மாத்திரம் உண்டெனலாம். இசைக்கலைக்கும், நாட்டியக்கலைக்கும் தவமணிதேவியால் உயர்ச்சி உண்டெனலாம். சபைப்பயம் என்பது தவமணிதேவியால் அறியப்படாதது. இக்கலைகளில் இப்பெண்மணி மேன்மேலும் அனுகூலமடைந்து தம்மோடொத்த ஏனைய மகளிருக்கும் இக்கலைகளில் ஓர் வழிகாட்டுபவராக விளங்கிவரவேண்டுமென்பது எனது விருப்பம்.

## இந்திய வைஸ்ராய் பதவிக்கு வேவல்

### தெரிவுசெய்யப்பட்ட காரணம்

லண்டன் யூன் 20—

ஸேர். ஆர்சிபால்ட் வேவலின் நியமனத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'ஸண்டே டைம்ஸில' ஸ்க்ரூடேடர் எழுதுவதாவது:—

இந்திய தேசியத்தை இராணுவத்தைக்கொண்டு நாசஞ்செய்ய வேண்டுமென்ற எண்ணம் சிறிதளவும் கிடையாது. ஆனால், இப்பொழுது இந்தியாவின் இராணுவ முக்கியத்துவந்தான் அதி முக்கியமானதென்று யுத்த மந்திரிசபை கருதுகிறதென்று இந்தியமனம் காண்பிக்கிறது. ஜெர்மனி ஜப்பான் ஆகிய இருநாடுகளை ஜெயிப்பதுதான் முக்கியமானது.

ஜெர்மனியை எதிர்த்து நடைபெறும் போரில் இந்தியாவின் பங்கு கொஞ்சம் மறைமுகமாகவிருக்கிறது. ஜப்பானுக்கு எதிராக நடைபெறும் போரில் இந்தியா இதற்குள்ளாகவே பெரும்பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

யுத்தத்திற்கு யுத்த தளவாடங்கள் சேகரித்துக்கொடுப்பதில் இந்தியா ஐக்கியநாடுகளில் ஐந்தாவதாக இருந்துவருகிறது. 20 லட்சம் இராணுவ வீரர்களை இந்தியா பயிற்சி செய்கிறது. ஆனால், ஜப்பானுடன நடைபெறும் போரில் இதுவரை விசேஷ அபிவிருத்தி யொன்றையுங் காணேம். இராணுவ அனுபவம் உள்ள ஒருவர் வைஸ்ராயாக இருப்பதால் ஜப்பானுடன் போரை நடத்துபவர்களுக்குப் பெரும் உதவியாகவிருக்கும். ஜெனரல வேவலுக்கு இந்திய அனுபவம் போதிய அளவு இருக்கிறது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### வெள்ளி யூன் 25

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 காலைஇசை† 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேரை ஆர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 திருச்சேரை ஆர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 ஏ கே கணேசபிள்ளைபாட்டு 5-40 தூரான் ஷரீப் 6 துளிக்கரை எஸ் பிச்சையப்பா நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பாலைவனத்தில் ஓர் இரவு 8 ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8-30 குளிக்கரை எஸ் பிச்சையப்பா நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலக விவகாரங்கள் †† 10 கதம்பம் † 10-20 லீமா லிமாயி † 10-30 முடிவு.

### சனி யூன் 26

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் வைகுண்டஐயர் வயலின் 9 முடிவு.

1 கமலா தாகரத்னம் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சிந்து, கண்ணி † 2 தமிழில்செய்திகள் 2-05 எஸ் வைகுண்டஐயர் வயலின் 2-30 முடிவு.

மாலை: 5 கமலா நாகரத்னம் பாட்டு 5-40 அழகர் அந்தாதி 6 திரைக்கதம்பம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 புதுமுறைகள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 கதையின் கதை 8 மதராஸிலுள்ளபடி குன்னகுடி வெங்கடராமய்யர் பாட்டு 9.15 பஹுாராணி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தாங், வியோலா 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு யூன் 27

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 திரைகானம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸ்ரீரங்கம் கோவிந்தஐயங்கார் வீணை 9 முடிவு.

12 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 எஸ் டி பட்டம்மா, ராசப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைக்கதம்பம் † 2-30 முடிவு.

மாலை 5 ஸ்ரீரங்கம் கோவிந்தஐயங்கார் வீணை 5-40 தேவாராதனை 6 எஸ் டி பட்டம்மா, ராசப்பா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ஸ்திர சமுகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 எங்கள் தபால்பெட்டி 8 பாதுகா பட்டாபிஷேகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இருவயலின்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் யூன் 28

காலை 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 நாமகிரிப்பேட்டை கே கிருஷ்ணன் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் தண்டபாணிஐயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன் நாகஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6 ஆர் தண்டபாணிஐயர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-03 மிதமிஞ்சி சேகரித்தல் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 இசைக்கதம்பம்† 8 செம்பை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 சந்தி இசை 10 கதம்பம் † 10-30 முடிவு.

## இமயத்தைக் காட்டிலும் பழமையானது

### மண்சரிவு ஏற்பட்ட மேட்டு நிலம்

மதுரட்ட பகுதியிலுள்ள வெல்லகிரியாவில் சமீபத்தில் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டு அதன் விளைவாக ஒரு கோயிலும் 25 குடிசைகளும் நாசமாகியதுடன் பதினொருபேரும் உயிரிழந்தனரல்லவா? அந்தக் கோரமான நிலச்சரிவு நேர்முகமாகவோ அன்றி மறைமுகமாகவோ அங்குள்ள மேட்டில செய்யப்பட்டிருந்த விவசாயத்தின் காரணமாக ஏற்பட்டதா என்பதை அறியும் நோக்கத்தோடு அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி பரிசோதனை செய்தது.

மண் சரிவு ஏற்பட்டதன் காரணங்களை அறிந்துகொள்ளுவதற்கேதுவாகச் சில புலன்களைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டும் அங்குள்ள மண்ணின தன்மையைஅறிந்துகொள்ளும் பொருட்டும் ஸ்தலத்துக்குச் சென்று பரிசோதனை நடத்திய உதவிப் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் சில தகவல்களைச் சேகரித்திருக்கிறார்.

நிலச்சரிவு நடைபெற்ற இடத்திலிருந்த மேட்டு நிலத்தில் விவசாயம செய்ததும் காடு வெட்டியதும் தான இந்தக் கோரமான இதற்கு முன் நடைபெற்றிராத நிலச்சரிவு ஏற்பட்டதற்குக் காரணமென்ற ஒரு அபிப்பிராயம் ஸதலத்திலுள்ளவர்களிடையே நிலவிவருகிறது. இந்த அபிப்பிராயம் சரியானதுதானு அலலது இந்த மண்சரிவுக்கு அங்கு காணப்படும் மண்ணின் தன்மைதான் காரணமா என்பது இப்போது நடைபெற்றுவரும் பரிசோதகர்களிலிருந்து வெளிப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மண்சரிவு ஏற்பட்டது சம்பந்தமாக அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடியவர்கள் இலங்கையின் மேட்டுப்பகுதிகளிலிருக்கும் மண் பூமியமைப்புப்படி ஹிமாலய பருவதத்தைவிடப் பழமையானதென்றும் விவசாயம் செய்வதால் அப்பகுதிகளில் அற்ப மண் சரிவுகள் ஏற்படக்கூடுமேதவிரப் பிரமாண்டமான மண்சரிவுகள் ஏற்படமுடியாதென்றும் அவ்வளவுக்கு மண் இறுகி அமைந்திருக்கிறதென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

விவசாயஞ் செய்வதால் இவ்விதமான மண சரிவுகளேற்படாதெனினும் தகாதவிதமாக மேட்டின் உச்சியை வெட்டியபடியால் இத்தமண்சரிவு ஏற்பட இடமிருக்கிறதென்றும் அதே அதிகாரிகள் கூறுகின்றனர்.

## மறவன்புலோ விநாயகர் மகா கும்பாபிஷேகம்

நிகழும் சுபானு வருஷம் ஆனி மீ 4-ந் தேதி (18 6-43) வெள்ளிக்கிழமை நிகழ்ந்த கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் மறவன்புலோவில் வன்னற்குளமென்னும் திருப்பதியில்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு ஊரெழு பிரமஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள் அவர்களால் கிரியாகலாப பூர்வமாக மகாகும்பாபிஷேகம் செவ்வனே செய்யப்பெற்றது.

—கடித




சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

**சில்லாலைமுத்துவைத்தியசாலை**

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசிராய் நடத்தும் அரசினரின் அங்கிகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q, 30, 11-5.43—10-8.43)

குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். **K. A.** இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44

**தேயிலை** மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலை

யாழ்ப்பாணம் கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்டாரிடம் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், கோப்பறேற்றிவ் ஸ்ரோர்ஸ் லிமிற்றெட்,
150, ஆஸ்பத்திரித்தெரு, பெரியகடை, யாழ்ப்பாணம்.
மார்க்கெற்றிங் இலாகாத் தேயிலைக்கு ஏஜெண்டுகள்.

Mis. 45, 3-6—28-6-43.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday 24, June 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org